உண்மை சொல்வோம் - நன்மை செய்வோம்
மணிச்சுடர்
19/20.2.2013

# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சிங்கப்பூரில் நடத்திய இலவச தேர்வுப் பயிலரங்கு

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற ஞாயிற்றுக்கிழமை 17-02-2013 அன்று, காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, "மாணவர்களுக்கான இலவச தேர்வுப் பயிலரங்கு" ஒன்றை மிகச் சிறப்பாக நடத்தியது.

இருபது ஆண்டுகள் அனுபவம் பெற்ற கணினிப் பொறியாளரும், மன ஆற்றல் கொண்டு தூண்டப்படும் அறிதுயில் துறையில் பட்டயச் சான்றிதழ் பெற்றவருமாகிய திருமதி விமலா, இப்பயிலரங்கை நடத்தினார். தேர்வுகளை நம்பிக்கையுடன் அணுகும் முறை, பயமின்றி செயல்படுதல், நேரம் நிர்வகித்தல், மன அழுத்தத்தை கையாளும் வழிமுறைகளைத் தெளிவாக விளக்கும் வண்ணம் இப் பயிலரங்கு நடத்தப்பட்டது.

சுமார் ஐம்பது இந்திய மாணவர்களும் பெற்றோர்களும் இப்பயிலரங்கில் கலந்து கொண்டனர். கல்வி சார்ந்த சமுதாயப் பணிகளை பிரதான நோக்கமாகக் கொண்ட ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூர் இந்திய மாணவர்களின் மேம்பாட்டிற்காக நடத்திய இப் பயிலரங்கு, பள்ளி மாணவர்களுக்கு பயனளிக்கும் வண்ணம் அமைந்திருந்தது.

சங்கத்தின் துணைத் தலைவர் கலந்தர் மொஹிதீன் விழாவுக்கு தலைமை தாங்கினார். சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் பரீஜ் முஹம்மது வரவேற்புரை வழங்க, ஜனாப் ஜாவித் அஹமத் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். செயற்குழு உறுப்பினர் பஷீர் அஹமது பயிலரங்கை தொகுத்து வழங்க, ஹபீபூர் ரஹ்மான் நன்றி கூறினார். இத்தகவலை சங்கத் தலைவர் முஹ்யித்தீன் அப்துர் காதர் தெரிவித்துள்ளார்.




